**<u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

செய்தி வெளியீட்டு எண்: 89/2022 நாள்: 21.12.2022

மாண்டஸ் புயலின் காரணமாக 10.12.2022 மு.ப மற்றும் பி.ப அன்று நடைபெறவிருந்த தமிழ்நாடு வன சார்நிலைப் பணியில் அடங்கிய வன தொழில் பழகுநர் (தொகுதி - VI) பதவிக்கான கணினி வழித் தேர்வு (கொள்குறிவகை) கீழ்காணும் தேதியில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

| அறிவிக்கை எண் மற்றும் நாள் | தேர்வின் பெயர் | தேர்வு நடைபெறும் நாள் |
|---|---|---|
| 20/2022, 08.08.2022 | தமிழ்நாடு வன சார்நிலைப் பணியில் அடங்கிய வன தொழில் பழகுநர் (தொகுதி - VI) | **<u>27.12.2022 (Marine Biology)</u>**<br>முற்பகல் 9.30 மணிமுதல் 12.30 மணி வரை<br>மற்றும்<br>**<u>27.12.2022 (Physics)</u>**<br>பிற்பகல் 2.30 மணி முதல் 5.30 மணி வரை |

தேர்வர்கள் 10.12.2022 மு.ப மற்றும் பி.ப நடைபெறுவதாக இருந்த தமிழ்நாடு வன சார்நிலைப் பணியில் அடங்கிய வன தொழில் பழகுநர் (தொகுதி -VI) பதவிக்கான தேர்வுக்காக ஏற்கனவே பதிவிறக்கம் செய்த நுழைவுச் சீட்டினையே உபயோகித்து 27.12.2022 மு.ப மற்றும் பி.ப அன்று நடைபெறும் தேர்வினை நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதே தேர்வு மையத்திலேயே (திருச்சியைத் தவிர) தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் திருச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வர்களுக்கு மட்டும் திருத்தம் செய்யப்பட்ட தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு தேர்வாணைய இணையதளங்களான www.tnpsc.gov.in, www.tnpscexams.in ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம் (OTR DASHBOARD) மூலமாக மட்டுமே விண்ணப்ப எண், பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து திருத்தம் செய்யப்பட்ட தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் (Hall Ticket) செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அஜய் யாதவ் இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்